மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை :- **திரு மதி.A. சீத்தாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு ஜீலை மாதம் 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஆனித்திங்கள் 29 ஆம் நாள்

**இடைநிலை மனு எண் 577/22-ல்**

**அசல் வழக்கு எண். 122/2015**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, பாளையக்கோட்டை கிராமம், காளியம்மன் கோவில் தெரு என்ற முகவரியில் வசிக்கும் காளிமுத்து குமாரர், இந்து, விவசாய தொழில் செய்யும் 60 வயதுள்ள சுப்பிரமணியன். ... மனுதாரர்/ வாதி

**// எதிர்//**

1. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, காளியம்மன் கோவில் தெரு, பாளையக்கோட்டை என்ற முகவரியில் வசிக்கும் வீரப்பன் குமாரர், இந்து, விவசாயம், 55 வயதுள்ள பாலகிருஷ்ணன்.
2. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தாலுக்கா, காளியம்மன் கோவில் தெரு, பாளையக்கோட்டை என்ற முகவரியில் வசிக்கும் வீரப்பன் குமாரர், இந்து, விவசாயம், 52 வயதுள்ள தமிழ்செல்வன்.
3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மன்னார்குடி.
4. தமிழ்நாடு அரசுக்காக மாவட்ட ஆட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருவாரூர்.

...எதிர்மனுதாரர் /பிரதிவாதிகள்

இம்மனுவானது அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி3 ஆக விசாரிக்கப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை மீண்டும் வாதி தரப்பில் மறுவிசாரணை செய்வதற்காக மறு அழைப்பு (Recall) செய்ய உத்தரவிடக்கோரி உ.ந.ச. கட்டளை 18 விதி17 சிபிசி-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 15.12.2022

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 23.12.2022

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு 27.06.2023 ம் தேதியன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ஜீவானந்தம் அவர்களும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன், அவர்கள் முன்னிலையாகியும்,3,4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுத்தரப்பு வழக்கறிஞர் திரு.V.சச்சிதானந்தம் அவர்கள் முன்னிலையாகி எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்தும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இது நாள் வரை என் பரிசீலனையில் இருந்து வந்து (14.07.2023) இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீர்ப்பாணை உத்தரவு**

01. மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு மனு செலவுத்தொகையாக ரூ.500/-ஐ எதிர்வரும் 27.07.2023 ம் தேதிக்குள் செலுத்தி வைக்க வேண்டும் என்றும் தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடி செய்யப்படும் என்ற நிபந்தனையுடன் மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. இம்மனுவினை மீண்டும் அழைக்க 28.07.2023

2023 ம் ஆண்டு ஜீலை மாதம் 14-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(S/d. A.Seethalakshmi)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.(மு.கூ.பொ)